1984 மார்ச் 8]

(பிற்பகல் 1—20)

திரு. ஏ. பாலுச்சாமி : ஏழை விவசாயிகளின் உயிர், உடைமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டால் ரூபாய் 10 ஆயிரம் வழங்கும் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் 1984—85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கொண்டு வந்துள்ளதை ஏழை விவசாயிகள், நடுத்தரப்பட்ட விவசாயிகள் அனைவரும் பாராட்டுகிறார்கள். ஆனால் விவசாயிகளுக்காக நான்தான் என்று கூறி விவசாயிகள் சங்கத்தை வைத்து அரசியல் நோக்கத்திலே, அரசியல் மோகத்தினால் அரசியல் களத்திலே இருக்கின்ற பெரியவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் இந்தத் திட்டத்தை பாராட்டக்கூடாதா? இதுபோன்ற நல்ல மனப்பக்குவம் இல்லையே என்றுதான் வேதனைப்படுகின்றோம்.

மேலும் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஊர் ஊராக நடக்க ஆரம்பித்துள்ளார்கள். இவர்கள் போகின்ற ஊர்களில் எல்லாம் இவர்களது பிரச்சார வாசகங்கள் என்ன தெரியுமா? இடி அமின் ஆட்சி தமிழகத்தில் நடக்கின்றது. இந்த இடி அமின் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சி இன்னும் எத்தனை காலத்திற்கு என்ற ஒரு வினாவை வேறு கிளப்பி விட்டிருக்கிறார். இதைக் கிளப்பியது யார்? இந்தத் தமிழகத்தை 7 ஆண்டுக் காலம் இடி அமீன் போன்று ஆட்சி நடத்திய கலைஞர் கருணாநிதி அவர்கள் காருண்யத்தைப் பற்றி கசாப்பு கடைக்காரன் பேசுவதைப் போல், கொலை பாதகம் செய்பவன் அன்பு நெறியை உபதேசம் செய்வதைப் போல், கலைஞர் கருணாநிதி அவர்கள் இடி அமீன் ஆட்சியை உதாரணம் காட்டிப் பேசலாமா என்று இந்த மாமன்றத்தில் உள்ள நல்ல எண்ணம் கொண்ட உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறேன். இடி அமீன் யார் என்று இந்த மாமன்ற உறுப்பினர் அனை வருக்கும தெரியும். தனக்கென்று தானாகச் சிலை வைத்தவர் தான் இடி அமீன். அரசு கட்டிடங்களுக்குத் தனது பெயர்ப் பலகையைச் சூட்டச் சொன்னவர்தான் இடி அமீன். தானே ராசா, தானே மந்திரி என்று ஆட்சி நடத்தியவர்தான் இடி அமீன். இந்த மாமன்ற உறுப்பினர்களை வேண்டிக் கேட்கின் றேன். கலைஞர் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் தனக்கென்று சிலை வைத்தவர் கலைஞர் கருணாநிதியவர்களாகும். அது போன்று அரசு அலுவலகக் கட்டிடங்களுக்குத் தனது பெயரை சூட்டி பெருமை அடைந்தவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

7. அறிக்கை அளித்தல்

விதி 106–ன் கீழ் வெள்ள நிவாரணம் பற்றிய அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 106-ன்கீழ் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவையினுடைய தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 106-ன் கீழ் 6—3—1984 மற்றும் 7—3—1984 இரண்டு தினங்களில் பெய்த மழையினால் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களைப் பற்றிய அறிக்கையினை அவைக்கு அளிக்கின்றேன்.

மதுரை மாவட்டம்—

வைகை நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு (Capacity) 71 அடி. அதில் 7—3—1984 அன்று 66 அடி நிரம்பியது.

நேற்று (7—3—1984) இரவு 69,000 கியூசெக்ஸ் தண்ணீர் வைகையில் விடப்பட்டது. இன்று காலை (8—3—1984) 14,000 கியூசெக்ஸ் மட்டுமே தண்ணீர் விடப்படுகிறது.

திருமங்கலத்தில் 62.22 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வட்டங்கள் நான்கு. அதாவது, பெரியகுளம், நிலக்கோட்டை, மதுரை வடக்கு மற்றும் மதுரை தெற்கு ஆகிய வட்டங்களாகும். அதிகமாக மழை பெய்தது பெரியகுளம் வட்டத்திலாகும்.

மொத்தக் குடிசைகள் சேதமடைந்தது, இப்பொழுது வந்த கணக்குப்படி 458 என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1,000 மக்கள் ஆரப்பாடி, தேவன்பட்டி முதலிய பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை 19,254. இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

7—3—1984 அன்று 8,000 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இன்றும் (8—3—1984) உணவுப் பொட்டலங்கள் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

இதுவரை இம்மாவட்டத்தில் ஏற்பட்ட உயிர்ச் சேதம் 11. காணாமல் போனவர்களின் எண்ணிக்கை மூன்று.

தேனி—உசிலம்பட்டி சாலையில் உடைப்பு ஏற்பட்டு, போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைச் சரி செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

தற்போது வைகையின் தண்ணீர் வடிந்து விட்டது. அபாயகரமான நிலைமை இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரும், வருவாய்த்துறை அதிகாரிகளும் மற்ற அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று நிவாரண வேலைகளில் நேரிடையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1984 மார்ச் 8] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

இராமநாதபுரம் மாவட்டம்—

6—3—1984 அன்று காலை வைகை நீர்த்தேக்கத்தில் மஞ்சளாறு வராக நதி மூலம் 43,000 கியூசெக்ஸ் தண்ணீர் திறந்து விடப்பட்டது. வைகைத் தண்ணீர் இல்லாமலேயே மானாமதுரை, சிவகங்கை, பரமக்குடி நீர் நிலையங்களில் தண்ணீர் முழு அளவை எட்டியது. வைகை ஆற்றின் தண்ணீர் வந்து விழும் இராமநாதபுரம் பெரிய குளத்திலும் (Ramnad Big Tank) சுமார் 6 அடி தண்ணீர் இருந்தது. ஆகவே முன் நடவடிக்கையாக சத்திரக்கோட்டை கண்மாயும், இராமநாதபுரம் பெரிய குளத்திலுள்ள தண்ணீரையும் வைகை நீர் வரும் என்று எதிர்பார்த்து திறந்துவிடப்பட்டன. ஆனால், இராமநாதபுரம் பெரிய குளத்தில் இன்னும் தண்ணீர் வந்து சேரவில்லை. இதற்குச் சேதமும் ஏற்படவில்லை. இராமநாதபுரத்திலுள்ள பல நீர்த்தேக்கங்கள் அதன் உச்சநிலையை அடைந்துவிட்டன. அதனால் திறந்து விடப்பட்டன. அதனால் வார்டிராப் நகராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டிருக்கின்றன. 35 நீர்நிலையங்களில் உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. 15 கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டிருக்கின்றன. விருதுநகர் வட்டத்தில் மங்களபுதுக்குடியில் உள்ள குளம் உடைந்தது. தாழ்வான பகுதிகளில் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றுமுள்ள வருவாய்த்துறை அதிகாரிகளும் துயர் துடைப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதுவரை கிடைத்தத் தகவல்கள்படி இராமநாதபுரம் மாவட்டத்திலே 7 பேர் உயிரிழந்தனர். 6 பேர்கள் காணாமல் போய்விட்டனர். சுமார் 10,000-லிருந்து 15,000 குடிசைகள் வரை பாதிக்கப்பட்டுள்ளன. 7—3—1984 அன்று 11,500 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து இரண்டு இந்திய கடற்படை ஹெலிகாப்டர்கள் 20,000 உணவுப் பொட்டலங்களுடன் இன்று (8—3—1984) காலை கிளம்பி பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உணவுப் பொட்டலங்கள் போட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. முழுச் சேதங்களின் விவரங்கள் கணக்கிடப்பட்டு வருகிறது. உடனடியான நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கணக்கிட்டப்பின் மேலும் தகுந்த நிவாரணங்கள் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மற்றுமுள்ள அதிகாரிகளும் துயர் துடைப்புப் பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவேண்டுமென்று அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS